நெல்லை, பொதிகை எக்ஸ்பிரஸ் நாளை முதல் மீண்டும் எழும்பூரில் இருந்து புறப்படும்

சென்னை, டிச.3

சென்னை எழும்பூர் ரெயில் நிலைய 4–வது நடைமேடையில் பராமரிப்பு பணி நடைபெற்று வந்ததால் நெல்லை எக்ஸ்பிரஸ் மற்றும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் தாம்பரத்தில் இருந்து இயக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் இந்த 2 ரெயில்களும் நாளை (புதன்கிழமை) முதல் சென்னை எழும்பூரில் இருந்து இயக்கப்படும் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

★ தாம்பரம் –நெல்லை இடையே இயக்கப்பட்ட நெல்லை எக்ஸ்பிரஸ் (வண்டி எண்:12631) மற்றும் தாம்பரம் – செங்கோட்டை (12661) இடையே இயக்கப்படும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் நாளை (புதன்கிழமை) முதல் எழும்பூரில் இருந்து இயக்கப்படும்.

இதைபோல் நெல்லையில் இருந்து புறப்படும் நெல்லை எக்ஸ்பிரஸ் (12632), செங்கோட்டையில் இருந்து புறப்படும் பொதிகை எக்ஸ்பிரஸ் (12662) நாளை முதல் எழும்பூர் வரை இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

செய்தித்துறை இணை இயக்குநர்கள் 3 பேருக்கு பதவி உயர்வு

சென்னை, டிச.3–

கவர்னர் மாளிகையின் இணை இயக்குனர் நிலையில் மக்கள் தொடர்பு அலுவலராக பணியாற்றி வரும் சிவ.சு.சரவணன், கூடுதல் இயக்குனராக பதவி உயர்வு பெற்று அதே பணியில் தொடர்கிறார்.

தமிழக செய்தித் துறை செயலாளர் மகேசன் காசிராஜன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:–

கவர்னர் மாளிகையின் இணை இயக்குனர் நிலையில் மக்கள் தொடர்பு அலுவலராக பணியாற்றி வரும் சிவ.சு.சரவணன், கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு பெற்று அதே பணியில் தொடர்கிறார்.

டெல்லியில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக மக்கள் தொடர்பு இணை இயக்குநராக உள்ள பி.முத்தையா, கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு பெற்று அதே பணியிடத்தில் தொடர்கிறார்.

சிப்காட் மக்கள் தொடர்பு இணை இயக்குநராக பணியாற்றி வந்த தி.அம்பல வாணன், பதவி உயர்வு பெற்று தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக் கழகத்தில் கூடுதல் இயக்குநராக (மக்கள் தொடர்பு) நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் தொழில் துவங்குவது எளிமையாக்கப்பட்டுள்ளது

அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் முதல்வரும் துணை முதல்வரும் எடுத்த முயற்சிகள் வெற்றி

பாராளுமன்றத்தில் ரவீந்திரநாத்குமார் எம்.பி. பேச்சு

புதுடெல்லி, டிச.3– தமிழகத்திற்கு அந்நிய முதலீடுகளை ஈர்க்க முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாக மக்களவையில் பேசிய ப.ரவீந்திரநாத்குமார் எம்.பி. கூறினார்.

மக்களவையில் வரி விதிப்பு சட்ட திருத்த மசோதா–2019 மீதான விவாதத்தில் அண்ணா தி.மு.க. மக்களவை குழு தலைவர் ப.ரவீந்தரநாத்குமார் எம்.பி. பேசியதாவது:

வரி விதிப்பு சட்ட திருத்த மசோதா–2019–க்கு முதலில் அண்ணா தி.மு.க. சார்பில் ஆதரவினை தெரிவித்து கொள்கிறேன். அதற்கு காரணம், தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. கீழ்மட்ட அளவில் வேலைவாய்ப்பினை பெருக்கவும், தொழிற்துறை வளர்ச்சிக்கு வித்திடவும் இந்த அரசின் இன்னொரு முயற்சியாக நான் கருதுகிறேன்.

அன்னிய முதலீடுகளை பெற தீவிரம்

உலகளாவிய பொருளாதார வளர்ச்சி குறைந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். 2018–ம் ஆண்டில் 90 சதவீத உலக பொருளாதாரம் குறைந்த சதவீதத்தில் வளர்ச்சி பெறும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்திருக்கிறது. நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி சதவீதத்தை 7.3 சதவீதத்திலிருந்து 2019–ம் ஆண்டில் 6.1 சதவீதமாக சர்வதேச நாணய நிதியம் குறைத்திருக்கிறது. இதனை அறிந்துதான் நமது பிரதமர் தலைமையிலான அரசு "வேறு வரி விலக்குகளை பெறாத கம்பெனிகளின் கார்ப்பரேட் வரியை 30 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், உற்பத்தி பிரிவில் தொடங்கப்படும் புதிய கம்பெனிகளுக்கு 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் குறைப்பதற்கு" அவசர சட்டம் கொண்டு வந்தது.

அந்த அவசர சட்டம் உரிய திருத்தங்களுடன் தற்போது மசோதாவாக வந்து விட்டது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட தேக்க நிலைமையால் நம் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கத்தை தணிப்பதற்கும், தொழிற்துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் இந்த மசோதா மூலம் அரசு பொறுப்புடன் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது.

உலகளாவிய பொருளாதார தேக்க நிலைமையை சமாளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் அதே நேரத்தில், குறைந்திருக்கும் அந்நிய முதலீட்டை மனதில் வைத்து, இந்த அரசு உற்பத்தி துறையில் அந்நிய முதலீட்டை அதிகரிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கு மாநில அரசுகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் அந்நிய முதலீடுகளை பெறுவதற்கு முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் பல்வேறு முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த "தமிழ்நாடு வணிக எளிதாக்குதல்" சட்டத்தால் மாநிலத்தில் தொழில் தொடங்குவது எளிமையாக்கப்பட்டு, இந்த வருடம் மட்டும் 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. ஆகவே அந்நிய முதலீடுகள் அதிகம் வருவதற்கு தேவையான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும். அதற்கு தேவையான திருத்தங்களையும் மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகளாவிய பொருளாதார தேக்க நிலைமையின் தாக்கத்தையும் கடந்து செல்லும் விதத்தில், நாட்டின் பொருளாதாரத்தை புதிய உயரத்திற்கு செலுத்துவதற்காக நிதியமைச்சர், பிரதமர் ஆகியோர் எடுத்து வரும் அர்ப்பணிப்பு மிகுந்த நடவடிக்கைகளுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். அந்த திடமான நம்பிக்கையுடன் இந்த மசோதாவினை நான் வரவேற்கிறேன்.

இவ்வாறு ப.ரவீந்திரநாத்குமார் எம்.பி. பேசினார்.

சிதம்பரம் நகரில் உள்ள எட்டு குளங்களை புனரமைக்க சிதம்பரம் நகராட்சிக்கும், Efi நிறுவனத்திற்க்கும் இடையேயான ஒப்பந்தம் கடலூர் மாவட்ட கலெக்டர் அன்பு செல்வன், சிதம்பரம் சார் ஆட்சியர் விசு மகாஜன் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது. சிதம்பரம் நகராட்சி ஆணையாளர் சுரேந்திரா ஷா உடன் உள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் சி.வி. சண்முகம் தலைமையில் குற்றவழக்குத் தொடர்வுத்துறையின் மாநில அளவிலான சீராய்வு கூட்டம் நடைபெற்றது. குற்ற வழக்குத் தொடர்வுத்துறை இயக்குநர் டி.ஆர்.எஸ்.ராமமூர்த்தி, இணை இயக்குநர் ஜி.சித்ராதேவி மற்றும் குற்றவழக்குத் தொடர்வுத் துறையின் கீழ் பணிபுரியும் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குற்ற வழக்குகளில் தண்டனை பெற்று தருவதில் தமிழகம் 3–வது இடம்: அமைச்சர் சி.வி.சண்முகம் தகவல்

சென்னை, டிச.3–

சென்னை தலைமைச் செயலக கூட்ட அரங்கில் சட்டம், நீதிமன்றங்கள், மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையிலும், குற்ற வழக்குத்தொடர்வுத்துறை இயக்குனர் டி.ஆர்.எஸ். ராமமூர்த்தி, இணை இயக்குனர் ஜி.சித்ராதேவி ஆகியோர் முன்னிலையில் குற்றவழக்குத் தொடர்வுத்துறையின் மாநில அளவிலான சீராய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வு கூட்டத்தில் குற்றவழக்குத் தொடர்வுத்துறையின் கீழ் பணிபுரியும் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

கலந்தாய்வின் போது அமைச்சர், குற்ற வழக்குகளில் அதிகப்படியான தண்டனைகள் பெறுவதற்கான ஆலோசனைகள் வழங்கினார். மேலும், அமைச்சர், அகில இந்திய அளவில் குற்ற வழக்குகளில் தண்டனை பெற்று தருவதில் தமிழகம் மூன்றாவது இடம் பெற்றுள்ளது. இதற்கு காரணமான அரசு வழக்கறிஞர்களை பாராட்டியும், முதலிடம் பெறுவதற்காக சிறப்பாக பணியாற்றிட வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார்.

இத்துறையில் பணிபுரியும் அரசு வழக்கறிஞர்களின் நலன்களுக்காக பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனு, அரசு வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. கோரிக்கைகள் மீது பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அமைச்சர் உறுதி அளித்தார்.

முன்னதாக, காஞ்சிபுரம் துணை இயக்குநர் மற்றும் அரசு வழக்கறிஞர்கள் சங்கத்தலைவர் டி.பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றி நினைவு பரிசு வழங்கினார். சங்க செயலாளர் வாஷிங்டன் தனசேகர் பொன்னாடை அணிவித்தும், சங்க பொருளாளர் பூங்கொத்து கொடுத்தும் அமைச்சரை வரவேற்றனர். இயக்குநர் டி.ஆர்.எஸ். ராமமூர்த்தி நன்றி கூறினார்.

தமிழக அரசுக்கு எதிராக தொடர்ந்த கோர்ட் அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு தடை

ஐ.ஜி. பொன் மாணிக்கவேல் சிலை கடத்தல் வழக்கு ஆவணங்களை உயர் அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்: சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, டிச.3

சிலை கடத்தல் வழக்கு ஆவணங்களை உயரதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஐ.ஜி. பொன் மாணிக்கவேலுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. அவர் தமிழக அரசுக்கு எதிராக தொடர்ந்த கோர்ட் அவமதிப்பு வழக்கு விசாரணைக்கும் தடை விதிக்கப்பட்டது. கடந்த 2018ம் ஆண்டு நவம்பர் 30ந் தேதி ஓய்வுபெற்ற ஐ.ஜி. பொன் மாணிக்கவேலை சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் மேலும் ஒரு ஆண்டுக்கு சிறப்பு அதிகாரியாக நியமித்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

இந்த நிலையில் ஐ.ஜி. பொன்மாணிக்கவேல் பணி நீட்டிப்பு கடந்த மாதம் 30ந் தேதியுடன் முடிவடைவதால் சிலை கடத்தல் வழக்கு தொடர்பான ஆவணங்களை உயரதிகாரியிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டும் என்று தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தது. மேலும் சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசுக்கு எதிராக பொன் மாணிக்கவேல் தொடர்ந்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என்று கூடுதல் மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் நேற்று சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் அசோக்பூஷண், எம்.ஆர்.ஷா ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு தரப்பில் மூத்த வக்கீல்கள் முகுல் ரோத்தகி, ஜெயந்த்பூஷண், கூடுதல் அட்வகேட் ஜெனரல் பாலாஜி சீனிவாசன், அரசு வக்கீல் பா.வினோத்கன்னா ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

ஐ.ஜி. பொன் மாணிக்கவேல் தரப்பில் வக்கீல் சாய்தீபக், ஐகோர்ட்டில் மனுதாரராக இருந்த யானை ராஜேந்திரன், டிராபிக் ராமசாமி தரப்பில் வக்கீல் ஜி.எஸ். மணி, வக்கீல்கள் முத்துக்குமார், ஆனந்த் ஆகியோர் ஆஜரானார்கள்.

வழக்கு விசாரணையின்போது பொன் மாணிக்கவேல், கூடுதல் டி.ஜி.பி. அபய்குமார் சிங், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு சூப்பிரண்டு ராஜேஸ்வரி ஆகியோர் கோர்ட்டில் ஆஜராகி இருந்தனர். தமிழக அரசு தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதம் வருமாறு:

சிறப்பு அதிகாரி பொன் மாணிக்கவேல் சிலை கடத்தல் வழக்குகள் தொடர்பான ஆவணங்களை சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி அரசிடமோ மேலதிகாரிகளிடமோ ஒப்படைக்கவில்லை. இது மிகப்பெரும் விதிமீறல். சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் 70 அதிகாரிகளில் 51 அதிகாரிகள் அவருக்கு எதிராக மனுக்கள் தாக்கல் செய்தனர்.

அவருடைய பதவி நீட்டிப்பு கடந்த மாதம் 30ந் தேதியுடன் முடிவடைந்தது. முக்கியமான ஆவணங்களை அவர் தன்னிடம் வைத்துக் கொள்ள முடியாது, மூத்த அதிகாரியிடம் ஒப்படைத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் அவர் அரசுக்கு எதிராக கோர்ட் அவமதிப்பு வழக்கு தொடர்கிறார். அவர் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டார். எனவே அவர் இனியும் சிலை கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரியாக தொடரக்கூடாது. நாங்களே வேறு ஒரு அதிகாரியை நியமிக்கிறோம். இவ்வாறு வாதாடப்பட்டது. இதற்கு நீதிபதிகள், தமிழக அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர வேண்டிய அவசியம் என்ன? என்று கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு பொன் மாணிக்கவேல் தரப்பில் ஆஜரான வக்கீல்கள், காணாமல்போன சிலைகளை கண்டுபிடிக்க வேண்டும் என்ற அக்கறை தமிழக அரசுக்கு கிடையாது. சென்னை ஐகோர்ட்டுக்கு இருந்தது. அதனால்தான் பொன் மாணிக்கவேலை நியமித்து அவரது செயல்பாடுகளை அவர்களே கண்காணித்தனர். ஆனாலும் தொடர்ந்து அவருக்கு தொல்லைகள் கொடுத்ததால்தான் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது என விளக்கம் அளித்தனர். அதற்கு பதிலளித்த தமிழக அரசு தரப்பு, பணி எப்போது நீட்டிக்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட் தெளிவாக கூறியுள்ளது. தவிர்க்க முடியாத சூழ்நிலை வரும்போது ஒரு அதிகாரியின் அவசியம் கட்டாயம் தேவை என அரசு கருதும்போது பணி நீட்டிக்கலாம் என கூறியிருக்கிறது. இந்த விவகாரம் அப்படி இல்லை. எனவே பொன் மாணிக்கவேல் பணி நீட்டிப்பு அவசியம் இல்லை என தெரிவித்தது.

ஆவணங்களை ஒப்படையுங்கள்

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், சென்னை ஐகோர்ட்டில் பொன் மாணிக்கவேல் தொடர்ந்த அவமதிப்பு வழக்கை விசாரிக்க இடைக்கால தடை விதித்து உத்தரவு பிறப்பித்தனர்.

மேலும் பொன் மாணிக்கவேல் அனைத்து ஆவணங்களையும் சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் உயர் அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பொன் மாணிக்கவேலுக்கு பணி நீடிப்பு வழங்குவது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டே முடிவெடுக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தனர். பணி நீட்டிப்பு வழங்க கூடாது என தமிழக அரசு தொடர்ந்த மனு மீது பதில் அளிக்குமாறு பொன் மாணிக்கவேல், டிராபிக் ராமசாமி ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பவும் உத்தரவு பிறப்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து பொன் மாணிக்கவேல் தரப்பில், ஆவணங்களை தமிழக அரசிடம் ஒப்படைக்காமல் ஐகோர்ட்டில் ஒப்படைக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை நீதிபதிகள் ஏற்க மறுத்தனர்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747, Fax: 91-44-22346699

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 டிசம்பர், 2019ல் முடிந்த மூன்றாவது காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வியாழக்கிழமை, 23 ஜனவரி 2020 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்திராணி ரே
கம்பெனி செயலாளர்
கொல்கத்தா, 3 டிசம்பர் 2019

செங்கல்பட்டு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்த கன மழையால் பாதிக்கப்பட்ட தாம்பரம், முடிச்சூர், சிட்லாபாக்கம், நாராயண புரம் உள்ளிட்ட பகுதிகள் மற்றும் ஏரிகளை மாவட்ட கலெக்டர் ஜான் லூயிஸ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் மீட்பு பணிகளை சீரமைப்பு செய்ய உத்தரவிட்டார். உடன் அண்ணா தி.மு.க. காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச. ராஜேந்திரன் ,முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் கே. பி.கந்தன், ஒன்றிய செயலாளர் என்.சி.கிருஷ்ணன், வட்ட செயலாளர்கள் எத்திராஜ், பி.எம்.ஆர்.ராமதாஸ் மற்றும் உள்ளகரம் ரஞ்சித் குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.

ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
(முன்னர் கேபிடல் பர்ஸ்ட் லிமிடெட், ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டது)
CIN : L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர்ஸ், 8வது தளம், ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022

IDFC FIRST Bank

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் **முன்னர் கேபிடல் பர்ஸ்ட் லிமிடெட் (ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டது மற்றும் தற்போது ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்)** கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற கடன்களை பெற்றிருந்தனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெற்ற கடனுக்கு ஈடாக உரிய சொத்துக்கள் அடமானமாக பெறப்பட்டது. கடன் ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்க மற்றும் ஒழுங்காக திரும்ப செலுத்த அவர்கள் தவறிவிட்டனர். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் வழிகாட்டுதலின்படி அவர்களின் கடன்கள் என்பிஏ ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் **முன்னர் கேபிடல் பர்ஸ்ட் லிமிடெட் (ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டது மற்றும் தற்போது ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்)** கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் மேற்சொன்ன தொகையின் மீது அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான மற்றும் பொருந்தக்கூடிய மேலும் வட்டி ஆகியவை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் மற்றும் உடன்கடன்தாரர்கள் பெயர்	பிரிவு 13(2) அறிவிப்பு தேதி	பிரிவு 13(2) அறிவிப்பு படி செலுத்த வேண்டிய தொகை	சொத்து முகவரி
1	14590790 & 15427518	வீட்டு கடன் மற்றும் சொத்து மீது கடன்	1. அஹமீது இப்ராகிம் 2. முகம்மது அக்பர் அலி	18.11.2019	ரூ. 3279982.25	புதுச்சேரி பதிவு மாவட்டத்தில் காலியாக உள்ள மனை மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். புதுச்சேரி துணை பதிவு மாவட்டம், புதுச்சேரி நகராட்சி வரம்பு, கிராம எண் 40, புதுச்சேரி வருவாய் கிராமம், முத்தியால்பெட், சோலி நகர், ஆவணத்தின் படி வார்டு–ஏ, பிளாக் எண் 15, டி.எஸ் எண் 26 ஆர்எஸ் எண்.59/3 பகுதி காடாஸ்ட்ரே எண் 606 பிடி 610, பட்டா எண். 332, தற்போதைய தீர்வுப்படி, வார்டு–ஏ, தொகுதி எண் 15, டி.எஸ். எண். 26/1, ஆர்.எஸ். எண்.59/3 பகுதி, காடாஸ்ட்ரே எண் 606 பிடி, 610, பட்டா எண். 2006, வார்டு–ஏ, தொகுதி எண் 15, டி.எஸ்.26/2, ஆர்.எஸ். எண்.59/3 பகுதி, காடாஸ்ட்ரே எண் 606பிடி, 610 பட்டா எண் 2007, வார்டு–ஏ, தொகுதி எண் 15, டி.எஸ்.என்.26/3, ஆர்.எஸ்.எண் 59/3 பகுதி, காடாஸ்ட்ரே எண் 606 பிடி, 610, பட்டா எண்.2008, 'தனலட்சுமி தோட்டம்' என அழைக்கப்பட்டுள்ளது, அளவு கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 41 அடி, தெற்கு பக்கம் 43 அடி 3 இஞ்ச், வடக்கு தெற்கு 20 அடி. மொத்த விஸ்தீரணம் 842 சதுர அடி காலி மனை. மனை எண். 34. எல்லை விவரங்கள் கிழக்கு: புதிதாக உருவாக்கப்பட்ட 20 அடி, சாலை, தெற்கு: மனை எண் 33, மேற்கு: டி.எஸ். எண் 30 நிலம், வடக்கு: மனை எண் 35
2	15087687	சொத்து மீது கடன்	1. கோபிராஜ் P 2. G K பிரபாகரன்	15.11.2019	ரூ. 1068612.13	புதுச்சேரி பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள காலியாக உள்ள மனை மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். வில்லியனூர் துணை பதிவு மாவட்டம், வில்லியனூர் கம்யூன் பஞ்சாயத்து, கிராமம் எண் .52, அரியூர் வருவாய் கிராமம், ஆர்.எஸ். 103/4, காடாஸ்ட்ரே எண். 325/1, 325/2 மனைகளாக பிரிக்கப்பட்டது, மனை எண். 31 அளவு கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 53.6 அடி, வடக்குப் பக்கம் 53 அடி, தெற்கு வடக்கு 20 அடி, மொத்தம் 1065 சதுர அடி காலி மனை. எல்லைகள்: கிழக்கு: புதிய பாதை, வடக்கு: தட்ணாசமூர்த்தி மனை எண் 30, தெற்கே: காசியம்மாள் மனை எண் 32, மேற்கு: மனை எண் 33
3.	10439438	வீட்டு கடன் எச்எல்	1. M. சரண்ராஜ் 2. அனுப்ரியா G	15.11.2019	ரூ. 2552945.52	கதவு எண். 30/18ல் உள்ள நிலம், கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். திருப்பூர் குமரன் தெரு, உடையார் கோவில், சென்னை 600056, நில விஸ்தீரணம் 1470 சதுர அடி மற்றும் 1000 சதுர அடியில் உள்ள கட்டிடம், பழைய கிராம நத்தம் சர்வே எண். 168, பட்டா எண். 429 பட்டாபடி புதிய கிராம நத்தம் சர்வே எண்.168/4ஏ, எண் 34, உடையார் கோவில் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கு: சாலை (திருப்பூர் குமரன் தெரு), தெற்கு: திரு. வேதகிரிக்கு சொந்தமான சொத்து, கிழக்கு: திரு. ஜெயராமனுக்கு சொந்தமான சொத்து, மேற்கு: திரு. நாகலிங்கத்திற்கு சொந்தமான சொத்து. அளவு–கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 25 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 24 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 60 அடி. தென்சென்னை பதிவு மாவட்டம், பூந்தமல்லி சார்பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.
4.	12640786 3687581 & 3721002	சொத்து மீது கடன் மற்றும் வர்த்தக கடன்	1. ராஜா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் 2. S. ராஜலிங்க பாண்டியன் 3.ஜெயலட்சுமி R	18.11.2019	ரூ. 21283706.92	1653 சதுர அடியில் உள்ள நிலம் மற்றும் கட்டிடம். டி.எஸ். எண் 85/11 மற்றும் 164/10, தொகுதி எண் 1, புலியூர் கிராமம். பழைய கதவு எண் 9/1 புதிய கதவு எண் 129ஏ, எம்.ஜி.ஆர். தெரு, பெரியார் பாதை, சூளைமேடு சென்னை 600094 மற்றும் எல்லைகள்: வடக்கு: திரு. சண்முகசுந்தர பாண்டியனுக்குச் சொந்தமான சொத்து, தெற்கு: பெரியார் பாதை, கிழக்கு: திரு. பத்மநாப பிள்ளைக்குச் சொந்தமான சொத்து, மேற்கு: எம்.ஜி.ஆர். தெரு. சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கோடம்பாக்கம் சார்பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.
5.	10905444 & 11816759	வீட்டு கடன் எச்எல் மற்றும் வீட்டு கடன் எல்ஏபி	1. சதீஷ் C 2. மகாலட்சுமி R	18.11.2019	ரூ. 1408381.91	மனை எண். 64ல் உள்ள நிலம், கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். ஜெ.ஜெ. நகர், பெதிகுப்பம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்–601201, நில விஸ்தீரணம் 975 சதுர அடி சர்வே எண் 227, பட்டா எண் 237, எண் 62, பெதிகுப்பம் கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், எல்லைகள் வடக்கு: 20 அடி அகல சாலை, தெற்கு: மனை எண் 65, கிழக்கு: சர்வே எண் 228/5, மேற்கு: மனை எண் 63 அளவு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 20 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 19 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 50 அடி. வடசென்னை பதிவு மாவட்டம், கும்மிடிப்பூண்டி சார்பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.
6.	15724633	வீட்டு கடன்	1. T. ராம்சந்தர் 2. T. கிருஷ்ணாபாய்	11.11.2019	ரூ. 1061121.94	மனை எண். 58ல் உள்ள நிலம், கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். ஆர்.எஸ். 518/5பி மற்றும் 518/6, விஸ்தீரணம் 770 சதுர அடி, 'சுந்தர ஆஞ்சநேயர் நகர்' (டவுன் அண்ட் கண்ட்ரி பிளானிங் இயக்குனரால் அனுமதிக்கப்பட்ட லேஅவுட், செங்கல்பட்டு பிராந்தியம், செங்கல்பட்டு லேஅவுட் பிளானிங் அனுமதி ஒப்புதல் எண். 168/2014) கட்டம்பாக்கம் 'ஏ' கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சீபுரம் மாவட்டம் மற்றும் எல்லைகள். வடக்கு: மனை எண். 57, தெற்கே: மனை எண் 59, கி